**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,</u>

**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி</u>**

<u>2023 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25 ஆம் நாள் செவ்வாய்கிழமை</u>

**<u>இ.ம.எண்.02/2022 இன் அ.வ.எண்.322/2022</u>**

பொள்ளாச்சி தாலூக்கா, சின்ன நெகமம், தாராபுரம் ரோடு, பெரியகாடு, தோட்டத்துச்சாளை, எண்.1/138–ல் வசிக்கும் இந்து சுமார் 78 வயதுடைய திரு.ஆறுமுககவுண்டர் மகன் திரு.திருமலைசாமிகவுண்டர்.

... மனுதாரர்/வாதி

/ எதிர் /

பொள்ளாச்சி தாலூக்கா, சின்ன நெகமம், தாராபுரம் ரோடு, பெரியகாடு, தோட்டத்துச்சாளையில் வசிக்கும் இந்து சுமார் 71 வயதுடைய திரு.ஆறுமுககவுண்டர் மகன் திரு.சுப்பிரமணிய கவுண்டர்.

... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

மனுதாரர் அனுபவித்து வரும் மனுசொத்தின் பௌதீக தன்மையை மாற்றி எதிர்மனுதாரரோ அல்லது அவரது ஆட்கள் வகையறாக்களோ எவ்வித இடையூறு செய்யக்கூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 26.07.2022.

இம்மனுவானது கடந்த 17.04.2023 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.நந்தகோபாலகார்த்திகேயன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.செங்குட்டுவன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளை கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட....

## இறுதி உத்தரவு

| | |
|---|---|
| 1. | முடிவில், இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, வழக்கு ஏ மற்றும் சி அட்டவணை சொத்தில் மனுதாரர் கொண்டுள்ள சுவாதீன அனுபவத்திற்கு எதிர்மனுதாரரோ அல்லது அவரது ஆட்கள் வகையறாக்களோ எவ்வித இடையூறு செய்யக்கூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், வழக்கு டி மற்றும் பி அட்டவணை சொத்தை பொறுத்த இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட்டும் உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

## சொத்துவிபரம்

'A' SCHEDULE

முன்பு திருப்பூர் ரிடிடு, நெகமம் ரிசப்டி, பொள்ளாச்சி வட்டம், பெரிய நெகமம் கிராமம், க.ச.57/6A நெ.காலை பு.ஏ.8.95 இதில் மயில்சாமிகவுண்டர் பூமிக்கு வடக்கு, ஆறுமுக கவுண்டர் பூமிக்கு தெற்கு, சுப்பேகவுண்டர் பூமிக்கு மேற்கு, ஆ.சுப்பேகவுண்டர் பூமிக்கு கிழக்கு, இதன் மத்தியில் பு.ஏ.2.28, இதில் சுப்பிரமணியன் 1.14 பூமிக்கும் கிழக்கு, நா.சுப்பேகவுண்டர் பூமிக்கும் மேற்கு, ஆறுமுககவுண்டர் பூமிக்கு தெற்கு, மயில்சாமிக்கவுண்டர் பூமிக்கும் வடக்கு, இதன் மத்தியில் தென்வடலாக பு.ஏ.1.14 க்கு தீர்வை ரூ.1.78. ஷை பூமியானது புதிய சர்வேப்படி க.ச.57/6A நெ.பு.ஹெக் ஷை பூமிக்கு க.ச.57/7 நெ.காலை து.கிணற்றிலிருந்து மாமூல்படி தண்ணீர் பாய்த்துக்கொள்ள வேண்டிய தண்ணீர் பாத்தியம் மட்டும். ஷை பூமிக்குண்டான PAP அரணிமடை வாய்க்கால் பாத்தியமும் சகிதம். கிணறு பாத்தியமில்லை. (பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த 698 3/4 சதுரடி இடம் நீங்கலாக)

'B' SCHEDULE

முன்பு திருப்பூர் ரிடிடு, நெகமம் ரிசப்டி, பொள்ளாச்சி வட்டம், பெரிய நெகமம் கிராமம், க.ச.57/6A நெ.காலை பு.ஏ.8.95 இதில் மயில்சாமிகவுண்டர் பூமிக்கு வடக்கு, ஆறுமுக கவுண்டர் பூமிக்கு தெற்கு, சுப்பேகவுண்டர் பூமிக்கு

மேற்கு, ஆ.சுப்பேகவுண்டர் பூமிக்கும் கிழக்கு, இதன் மத்தியில் பு.ஏ.2.28 இதில் திருமலைசாமி பூமி 1.14க்கும் மேற்கு, சுப்பேகவுண்டர் பூமிக்கும் கிழக்கு, ஆறுமுககவுண்டர் பூமிக்கும் தெற்கு, மயில்சாமிகவுண்டர் பூமிக்கும் வடக்கு, இதன் மத்தியில் தென்வடலாக பு.ஏ.1.14 க்கு தீர்வை ரூ.1.78. ஷை பூமியானது புதிய உட்பிரிவுப்படி க.ச.57/6A நெ.காலை பு.ஹெக்.3.62.0. ஷை பூமிக்கு க.ச.57/7 நெ.காலை து.கிணற்றிலிருந்து மாமூல்படி தண்ணீர் பாய்த்துகொள்ள வேண்டிய தண்ணீர் பாத்தியம் மட்டும். ஷை பூமிக்கு உண்டான PAP வாய்க்கால் மடை பாத்தியமும் சகிதம். கிணறு பாத்தியமில்லை. (C ஷெட்யூல் 690 சதுரடி தடம் நீங்கலாக)

'C' SCHEDULE

முன்பு திருப்பூர் பதிவு மாவட்டம், தற்போது கோயமுத்தூர் பதிவு மாவட்டம், நெகமம் துணைப்பதிவு வட்டம், பொள்ளாச்சி வட்டம், பெரிய நெகமம் கிராமபுலத்தில் க.ச.57/6 ஏ நெ.காலை ஹெக் ஏர் 3.62.0 க்கு பு.ஏ.8.94 இதில் 2 லக்கமிட்டவர் பங்கில் தென்கோட்டில் கிழமேலாக 230 அடி நீளமும் 3 அடி அகலமும் ஆக 690 ச.அடி கிழமேலாக 1 லக்கமிட்டவர் செலவில் நிலத்தடிக்குழாய் அமைத்து 1 லக்கமிட்டவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களுக்கு தண்ணீர் கொண்டு போய் 1 லக்கமிட்டவர் பாய்த்துக்கொள்ள வேண்டியது. ஷை தடம் வழியாக ஆட்கள் கால்நடைகள் நடத்து கொள்ள பாத்தியமுண்டு. மேற்படி பைப்லைன் பழுதி ஏற்படும் காலங்களில் பைப்லைன் பழுது பார்த்துக்கொள்ளவும் புதுபித்துக்கொள்ளவும் 1 லக்கமிட்டவருக்கு பாத்தியப்பட்ட பங்கு பூமியில் மேல்கோட்டில் தென்வடலாக 215 அடி நீளமும் 3 1/2 அடி அகலமும் ஆக 698 3/4 சதுரடி பூமியில் 2 லக்கமிட்டவருக்கு பாத்தியப்பட்ட பூமியுடன் சேர்த்து அனுபவித்துக்கொள்ள வேண்டியது. க.ச.57/7 நெ.காலை கிணற்று தண்ணீரை மேற்படி கிணற்றிலிருந்து 2 லக்கமிட்டவருக்கு பாத்தியப்பட்ட 1.14 பங்கு பூமிக்கு – 50 அடி நீளத்திற்கு 2 லக்கமிட்டவர் பங்கு பூமியில் 2 லக்கமிட்டவர் செலவில் நிலத்தடிக்குழாய் போட்டு மேற்படி கிணற்று தண்ணீரை பாய்த்துகொள்வதில் 1 லக்கிமிட்டவருக்கு

எவ்வித ஆட்சேபனை கிடையாது. பி.ஏ.பி.தண்ணீர் வரும் காலங்களில் 1 லக்கமிட்டவர் பங்கு பூமியில் மத்தியில் கிழக்கேயிருந்து ஒத்தக்கல் வாய்கால் வழியாக தொடற்சியாக நேர் மேற்கே நிலவாய்கால் மூலம் தண்ணீர் பாய்த்துக்கொள்ள 2 லக்கமிட்டவருக்கு உரிமையுண்டு.

'D' SCHEDULE:

கோயமுத்தூர் பதிவு மாவட்டம், நெகமம் துணைப்பதிவு வட்டம், பொள்ளாச்சி வட்டம், பெரிய நெகமம் கிராமபுலத்தில் க.ச.57/6ஏ காலையில் தாவா "பி" செட்யூல் சொத்துக்களில் தென்கோட்டில் கிழமேலாக 10 அகலமும் 230 அடி நீளமும் உள்ள கிழமேல் வண்டித்தடம். மேற்படி தடத்தின் வழியாக தென்வடல் மாமூல் மெயின் வண்டித்தடத்தில் இருந்து மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி தாவா ஏ செட்யூல் சொத்துக்கு ஆள் கால்நடை கனரக வண்டி வாகனங்கள் போகவர உண்டான பாத்தியம் சகிதம்.

இவ்வுத்தரவு 2023ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25 ஆம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(ஒப்பம்)/- N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---

**இறுதி உத்தரவு**
இ.ம.எண்.02/2022 இன் அ.வ.எண்.322/2022
நாள் : 25.04.2023
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

---